# அம்ருதா

## Amrudha Tamil Monthly


Volume 21 Issue 1
ஆண்டு 21 இதழ் 1

August 2026 Rs.30
ஆகஸ்ட் 2026 ரூ.30







**செழியன் எனும் கலைத்தவம்**

சொர்ணவேல்

**என் தமிழ், எனது மண், எங்கள் மக்கள்**

தமிழ்நதி

**கேபிரியல் கார்சியா மார்க்வெஸ் நேர்காணல்**

தமிழில்: ஸிந்துஜா



# ஜனநாயகத்தின் மரணம்


பிரபு திலக்


# மரமேறி

• T. தம்பிமுத்து          தமிழில்: **எழுத்துக்கினியவன்**

எதை ஒரு மனிதன் விரும்புகிறானோ அதுவே அவனை இறுதியில் கொன்று விடும். நான் சிறுவனாக இருந்தபோது மரமேறி வேலுவுக்கு நடந்ததைப் பார்த்ததால் இது உண்மை என்று நினைத்தேன்.

இலங்கையின் அச்சுவேலிக் கிராமத்தில் இருக்கும் தாடித் தாத்தாவின் தோப்புகளில் தான் சிறு பிராயத்தில் இருந்தே வேலு வேலை செய்து வந்தான். பழைய வழக்கப் படி அவன் ஆய்கிற ஒவ்வொரு நூறு தேங்காய்களுக்கும் பத்துக் காய்கள் அவனுக்குக் கூலியாக வழங்கப்பட்டன. நாங்கள் எங்கள் பெற்றோருடன் கொழும்பு நகரில் வசித்தோம். அங்கே தான் பள்ளிக்கூடம் போனோம். ஆனால், நீண்ட பள்ளிக்கூட விடுமுறைகளை அச்சுவேலியில் தான் கழித்தோம். இத்தகைய விடுமுறைகளில் நாங்கள் முதல் செய்வது வேலுவைத் தேடித் தென்னந்தோப்புக்குப் போவதுதான். அவன் எந்த நேரமும் ஏதாவது ஒரு வேலை செய்தபடியே இருப்பான். பனங்கள்ளு தான் திறமானது. பனைமரங்களிலிருந்து கள்ளிறக்க முடியாத மாதங்களில் தென்னை மரங்களிலிருந்து கள்ளிறக்குவான். அல்லது கூரை வேய்வதற்குக் கிடுகு பின்னுவதற்காகக் காய்ந்து போன தென்னோலைகளைக் கீழே இறக்குவான், அல்லது தேங்காய்களைக் கொப்பறா ஆக்குவதற்காகக் காய வைப்பான். கொப்பறா இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் முக்கியமானதொன்றாக இருந்தது. உலகத்திலேயே வளர்ப்பதற்கு எளிதான பயிர் தென்னைதான். எனக்குத் தெரிந்த வரையில் தாராளமாக அள்ளிக் கொடை வழங்கும் தருவாகவும் தென்னையே இருந்தது. இடைக்கிடை அறுவடை காலங்களில் வரும் உதவியாளர்களின் உதவியைத் தவிர, அவன் தனியொருவனாகவே இருநூறு தென்னை மரங்களைப் பாதுகாத்து வளர்த்து வந்தான். சில வேளைகளில் அவன் தென்னங்கன்றுகளை நடுவதைக் கண்டிருக்கிறோம். ஒரு பாழடைந்த கிணற்றுக்குள் விதைத் தேங்காய்களை மாதக் கணக்கில் ஊற





வைத்தபிறகு, மூன்றடிக்கு ஒன்றாகக் குழி தோண்டி நடுவார்கள். ஒவ்வொரு குழியிலும் உரமாகக் கொஞ்சம் சுண்ணாம்பும் உப்பும் தூவுவார்கள்.

அணில், முள்ளம்பன்றி, எலி, பழ வௌவால் போன்ற பீடைகளிலிருந்து காப்பாற்றுவதற்காக ஒவ்வொரு தென்னங்கன்றையும் சுற்றிவர ஓலைத் தட்டியால் வேலி கட்டுவான் வேலு. அடிக்கடி அவற்றின் பாத்திகளிலிருந்து களை பிடுங்கி, தண்ணீர் ஊற்றிப் பராமரிப்பான். இளங்குருத்துகளை நாசம் பண்ணும் குடம்பிகள், கறையான்கள், வண்டுகள் போன்றவை பீடித்து விடாமல் பாதுகாப்பான். தென்னங்கன்றுகள் கொஞ்சம் வேரூன்றியதும் அவன் செலுத்தும் கவனமும் அதிகரிக்கும். ஒரு தென்னங்கன்று எட்டு வருடங்களில் வளர்ந்து முதலாவது முறையாகக் காய்க்கத் தொடங்கி விடும். தான் வளர்த்த மரங்களில் வேலு ஆழ்ந்த பாசம் வைத்திருந்தான். எனக்கும் என் சகோதரர்களுக்கும் அப்படியான பாசத்தின் மகத்துவத்தைக் மறக்க முடியாத வகையில் கற்பித்தான். தென்னந்தோப்புகளில் அதிசயங்களும் அன்பும் நிரம்பி வழிவன. அந்தத் தென்னைமயமான உலகத்தில் பல உற்சாகப் படுத்தும் சம்பவங்கள் நடப்பன.

1922ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் விடுமுறைக்காகத் தாத்தா வீட்டுக்கு வந்த கையோடு வேலுவைத் தான் முதலில் தேடிப் போனோம். காதாடிப் பூட்டனாரோடு வேலுவின் குடிசைக்கு நாங்கள் போய்ச்சேர்ந்தபோது சூரியன் மறையும் நேரமாகி விட்டது. பூட்டனாரின் காதுகளில் பெருத்த கடுக்கன் தோடுகள் தொங்கிக் கொண்டிருந்த படியால் தான் அவரைப் பற்றிப் பேசும்போது 'காதாடிப் பூட்டனார்' என்று குறிப்பிட்டோம். அடுத்து வரும் ஆறு வாரங்களுக்கு ஒவ்வொரு நாளும் செவ்விளநீர் தேவை என்று வேலுவிடம் சொல்வதற்குத் தான் பூட்டனார் எங்களுடன் சேர்ந்து வேலுவைத் தேடித் தானும் வந்தார். குளிர்பானமாக அருந்துவதற்கேயென்று



விசேடமாக வளர்க்கபடும் செவ்விளநீர் மரங்கள் அவை.

பழுப்பு நிற ஓலைத்தட்டிகளால் வேயப்பட்ட வேலுவின் செம்மண் குடிசை ஊரில் உள்ள மற்றக் குடிசைகளைப் போலத் தோற்றம் அளித்தாலும், அயலில் இருந்த குடிசைகளைவிட விசாலமானது. அச்சுவேலியில் இருந்த மற்றக் குடிசைகளைப் போலவே இதற்கும் பனையோலையாலேயோ தென்னங்கிடுகளாலேயோ சுற்றிவர வேலி போடப்பட்டு, அதே விதமாகச் செய்த தலைவாசலில் போய் முடிந்தது. தலைவாசலைத் திறந்தால் வெள்ளைக் குருமணற் பாதை. வலப்பக்கத்தில் இருந்த திறந்த கொட்டகைக்குள் வேலுவின் பசுமாடும் ஒரிரு ஆடுகளும் கட்டப் பட்டிருந்தன. இடப்பக்கத்தில் ஒரு குகை போன்ற வாயிலைக் கொண்டிருந்த ஓலையால் வேயப்பட்ட செம்மண் குடில் இருந்தது. மா, பலா மரங்களும் சில வாழை மரங்களும், அன்னாசிச் செடிகளும் குடிசையைச் சூழ்ந்திருந்தன. குடிசைக்கு முன்னால் ஒரு சிறியவீட்டுத் தோட்டம் இருந்தது. அச்சுவேலியிலேயே மிகவும் சீராகப் பராமரிக்கப்பட்ட வீட்டுத் தோட்டம் அது தான். பந்தலிலிருந்து தொங்கிய ஒரு யார் நீளமான புடலங்காய்கள் பச்சையும் வெள்ளியுமாக மினுமினுத்தன. கீழே வளரும் பாகற்காய், பட்டாணிச் செடிகளுக்கூடாக நீண்டு வளர்வதற்காகப் புடலங்காய்களின் நுனிகளில் ஒட்டுத் துண்டுகள் கட்டப் பட்டிருந்தன. கத்தரி, தக்காளி, வெண்டிக்காய்ச் செடிகள், நிலைக்குத்தாக நடப்பட்ட கம்பங்களுடன் வாழை நார்களால் இணைத்துக் கட்டப்பட்டிருந்தன. வெற்றிலைச் செடிகளும் பண்ணுக் கிழங்குச் செடிகளும் கம்பங்களைச் சுற்றிப் படர்ந்து மேலே ஏறின. பருத்த நீற்றுப் பூசணிக்காய்களும் செம்மஞ்சள் நிறப் பூசணிக்காய்களும் செம்மண் தரையில் படர்ந்திருந்த அகலமான இலைகளுக்கு நடுவே வீற்றிருந்தன.

வேலு வீட்டுக் கிணறு ஒரு மூலையில் இருந்தது. அதைச் சுற்றி வட்டமான வரிசைகளில் ஒரு நூறு தென்னை மரங்கள் தழைத்தோங்கி நின்றன. ஊரார் சொல்வதன் படி ஒரு ஆறு தென்னை மரங்களும் ஒரு பலா மரமும் ஒரு பசு மாடும் வயல் ஒன்றில் ஒரு பங்கும் ஒருவருக்கு உரித்தாக இருக்குமானால் அவருக்குக் குறையெதுவுமே கிடையாது. இந்தக் கணக்குப்படி பார்த்தால் வேலு மிக வசதியான வாழ்க்கை கொண்டவன்தான்.

நாங்கள் வந்ததை முதலில் கவனித்தது வேலுவின் மனைவி. அவள் ஒரு சிறிய சாதுவான பெண். நாங்கள் வந்தபோது தன் சமையலறையில் அடுப்பில் கறுத்த சட்டிபானைகளோடு மும்முரமாக ஏதோ வேலை செய்தபடி இருந்தாள். அவளது சாதி வழக்கப்படி ரவிக்கை போடாமல் சேலையை மட்டும் உடுத்து முந்தானையை இடது தோளுக்கு மேலாகப் போட்டிருந்தாள். ஒரு பக்கமாக, குதிரைலாடம் போல இருந்த களிமண் அடுப்புகளில் மாலை நேர நெருப்புகள் கோலாகலமாக எரிந்து கொண்டிருந்தன. உள்ளே இருந்த காட்சி, ஒரு சம்பிரதாய பூர்வமான, தன்னிறைவான, ஆனால், மர்மம் கலந்த காட்சியாக இருந்தது—அடுக்குச் சட்டிகள் கூரைச் சிலாகைகளிலிருந்து தொங்கும் உறிகளில் வைக்கப்பட்டிருந்தன. சுவரில் மாட்டப் பட்டிருந்த அழகான பனையோலைக் கொளுக்கிகளில் வேறுபல சட்டிபானைகள் நிரையாகத் தொங்கிக் கொண்டிருந்தன. இது ஒரு கிராமத்துப் பெண்ணின் தனிப்பட்ட உலகம்.

“வேலு! வேலூ!” என்று அவனது மனைவி குரலெடுத்துக் கத்தினாள். அவள் கத்தின விதத்திலேயே ஏதோ ஒரு விசேடம் இருக்கிறது என்று வேலுவுக்குப் புரிந்து விட்டது. ஆகவே அவன் மூச்சிரைக்க ஓடி வந்தான். எங்களைக் கண்டதும் அவனது கரடு முரடான சுள்ளித் தாடி கொண்ட உயிர்ப்பு நிறைந்த முகம் சடாரென மலர்ந்தது. தோளில் கிடந்த துண்டை உருவி எடுத்து, இடுப்பைச் சுற்றிக் கட்டி மரியாதை தெரிவித்தான். ஐம்பத்தொரு வயதாகி விட்டாலும், ஒரு இளைஞனைப் போலக் கோடுகள் விழாத சந்தோஷமான முகமும், வில் போன்ற உருவங்கொண்ட, இந்தியருக்கே உரித்தான, மென்மையான உதடுகளும் அவனுக்கு இருந்தன. அவனது முகம் உறுதியும் மென்மையும் கலந்த ஒரு அசல் கிராமத்து முகம். இந்தப் பிரதேசங்களுக்கு வருகை தருபவர்கள் இப்படியான முகங்களைக் கண்டு வியந்து, சிருங்கார ரசத்தோடு அவை பூக்கள் மாதிரி இருக்கும் முகங்கள் என்று சொல்வார்கள். வேலுவைப் பார்த்தால் ஏதோ கள்ளுக் குடித்துக் கொண்டாடிக் கொண்டிருந்து விட்டு வந்தவன் போல இருந்தான்.

“ஹூ! ஹூ! ஹூ! ஹூ!” என்று வாய்விட்டுச் சிரித்தான் வேலு. “இளனி குடிக்கிறத்துக்காக அச்சுவேலிக்குத் திரும்பி வந்திட்டீங்களா! வாங்கோ, வாங்கோ ராசாமார்! உங்களைப் பாக்கவே என்ர கண் குளிருது!”

வேலுவின் மகள், பதினாறு வயதான ஒரு அழகான பெண், நாற்காலிகளை வெளியே கொண்டு வந்து வைத்தாள். நாங்கள் உட்கார்ந்து அளவளாவும் நோக்கத்தோடு வரவில்லை என்றாலும் உட்காரச் சொல்லி வற்புறுத்தினார்கள். வேலுவின் மூத்த மகன் உயரமாக இடுப்பில் வேட்டியை மட்டும் அணிந்த கறுத்த அழகனாக நின்றான். குறுகிய இடைக்கு மேலே அவனது கைகளும் நெஞ்சும் செதுக்கின சிற்பம்போல உருண்டு திரண்டு இருந்தன. விருந்தினருக்குப் பரிமாறுவதற்காக மரவள்ளிக் கிழங்கும் பனங்கிழங்கும் சாமான் அறையிலிருந்து எடுத்துக் கொண்டு வரும்படி அவன் அனுப்பப் பட்டான். இளைய மகன் குண்டு ஒரு வெட்கச்

சிரிப்புடன் மசுங்கி நின்றான். அண்ணனுக்கு எதிர்மாறான சிவந்த நிறத்துடன் தலை நிறைய அடங்காமல் திமிறும் தலை முடியுள்ள, குறும்புத்தனம் நிறைந்த, ஒன்பது வயதுப் பையன்.

“ஹலோ, குண்டு,” என்று கொஞ்சம் சந்தேகத்துடன் அவனை மேலும் கீழும் பார்த்தபடி கேட்டேன். அவன் கைகளை முதுகுக்குப் பின்னால் கோர்த்துக் கொண்டான்.

“இந்த முறை மரமேறப் போறியளோ?” என்று கொஞ்சம் இறுமாப்புடன் தலையாட்டியபடி கேட்டான். குண்டு அவன் தந்தையைப் போலவே மரமேறுவதில் விற்பன்னன். போன தடவை நாங்கள் மரமேற முயன்றும் எங்களால் முடியவேயில்லை.

“யாருக்கு மரமேற வேணும்?” என்று அக்கறையில்லாதவன் போலக் கொஞ்சம் சூடாகப் பதில் சொன்னேன். ஆனால், அவன் புத்திசாலி! எனது மரமேறும் ஆசை அவனுக்கு அப்பட்டமாகத் தெரிந்தது.

வேலு அவசரமாக, “நீங்கள் ஏதாவது குடிக்க வேணும்!” என்றான்.

“இல்லையில்ல, இப்ப வேண்டாம்,” என்றான் எனது அண்ணன் இரத்தினம். ஏதாவது அருந்தச் சொல்லிக் கேட்கும்போது வேண்டாம் என்று மறுப்பதுதான் நல்ல பண்பான பழக்கம் என்று எங்கள் எல்லோருக்குமே தெரிந்த விடயம்.

ஆனால், அது ஒரு சம்பிரதாய பூர்வமான மறுப்புதான். தனது குடிசைக்குப் பக்கத்திலே வளரும் விசேடமான செவ்விளநீர் மரங்களிருந்து எங்களுக்குக் குடிபானம் தருவதிலிருந்து வேலுவை எந்தச் சக்தியும் நிறுத்த முடியாது. வெள்ளை வெளேரென்று இருந்த வேட்டியைத் தன் கால்களுக்கிடையில் கொடுக்குக் கட்டிக் கொண்டு கிடுகிடுவென அந்த மூன்றுக்குள் உயரமாக இருந்த மரத்தில் ஏறினான். அதுதான் அவனுக்கு மிகவும் பிடித்தமான மரம். கிட்டத்தட்ட தொண்ணூறு அடி உயரமாகவாவது இருந்தது. அதன் இளநீர்த் தேங்காய்கள், காம்பை எடுத்தபிறகு அழகான பவள நிறத்தில் மின்னுவன. அவற்றின் மேற்பகுதியைச் சீவினால் உள்ளேயும் அதே கண்ணைப் பறிக்கும் பவள நிறம். எங்கள் அனுபவத்தில் இந்த நிறம்தான் அந்த மரத்தின் தேங்காய்களுக்குத் தனித்துவத்தைக் கொடுத்தது.

வேலு மிகுந்த வாஞ்சையோடு தன் கொடுவாள் கத்தியால் ஒரே சீவில் அந்த இளநீர்த் தேங்காய்களைச் சீவினான். பிறகு கத்தி முனையால் வட்டமான அல்லது சாய்சதுர வடிவமான துளைகளை ஏற்படுத்த உள்ளேயிருந்த அமுதம் ஷாம்பேன் மாதிரிச் சீறிக் கொண்டு வந்தது. பல மாத இடைவெளிக்குப் பிறகு அந்தக் கிராம அமுதத்தைச் சுவைக்கும்போது, இயற்கை வளத்தின் கொடையை நன்றாகவே உணர்ந்து கொண்டோம். இலங்கையிலேயே திறமான விலையுயர்ந்த எலுமிச்சம்பழச் சாறு கூடப் புதிதாக ஆய்ந்த செவ்விளநீருக்கு நிகராகாது!

‘நல்ல மரம்,’ ‘தீய மரம்,’ என்ற நம்பிக்கைகள் ஊரிலே பரவலாக இருந்தன. அரச மரம் நல்லது, வேப்ப மரம் தீயது. இப்படியான நேரங்களில் தென்னை மரங்கள் நல்லவை என்றே எனக்குத் தோன்றியது. வேலுவும் எங்களுக்கு அதைத்தான் போதித்தான். ஒருவனுக்கு ஒரு செவ்விளநீர் மரம் சொந்தமாக இருக்குமானால் அவனுக்கு இருக்கிற செல்வம் ஒரு பசு, ஒரு ஆளிச்செடித் தோட்டம், ஒரு சோடாப்பானத் தொழிற்சாலை, ஒரு திராட்சைத் தோட்டம், ஒரு மரக்காடு, கூரை வேய ஒரு வைக்கல் கும்பு, பசளைக்கு ஒரு உரக் குவியல், கால்நடைத் தீனி, ஒரு கரும்புத் தோட்டம், ஒரு நிலக்கடலை வயல் போன்ற எல்லாச் செல்வங்களையும் ஒரே நேரத்தில் வைத்திருப்பதற்குச் சமனானது என்பான். “தேவையான செல்வத்தை எல்லாம் வழங்கும் கற்பகதருதான் தென்னை. வெண்ணெய், பால், சாராயத்திலிருந்து, குடிசை கட்டுவதற்குத் தேவையான சகல பொருட்கள்வரை, சர்க்கரை, கயிறு, கள், எண்ணெய், இப்படிப் பலவற்றைத் தரும். உலகத்திலேயே ஆகப் பிரயோசனமான மரம் இதுதான்,” என்று எங்களுக்கு வேலு போதிப்பான். நாங்கள் அதை முற்றாக நம்பினோம்.

நாங்கள் விடுமுறையில் அச்சுவேலியில் தங்கியிருந்த ஒவ்வொரு நாளும், விடிகாலையில் முற்றத்தில் சூரிய வெளிச்சம் படும் நேரத்திலேயே வேலு எங்கள் வீட்டுக்கு வருவான். பிறகு மாலைப் பொழுதிலும் ஒருமுறை வருவான். தோளிலே எங்களுக்குச் செவ்விளநீரும், ஒரு உறியில் பெரிய பானையொன்றில் பூட்டனாருக்காகப் புதிதாக இறக்கிய கள்ளும் காவிக் கொண்டு வருவான். எங்களுக்கு உடனேயே இளநீர் அருந்த வேண்டும் என்றால் முற்றத்தில் குந்தி இருந்து தன் கொடுவாள் கத்தியால் இளநீர் வெட்டித் தருவான். இளநீர் சீவுவதில் அவன் விற்பன்னன். கூர்மையான கத்தியால் ஒரே சீவாகச் சீவுவதால், வாய்வைத்து இளநீர் அருந்தும் மேற்பரப்பு தட்டையாக வழுவழுப்பாக இருக்கும். கட்டடங்களாலும் புரசை மரங்களாகும் சூழப்பட்ட தாடித்தாத்தாவின் வீட்டு முற்றம் தான் வேலுவின் நடமாட்டங்களின் எல்லை. எல்லா உயர்த்தப்பட்ட சாதியினரின் வீடுகள் போலவே இங்கும் அந்த முற்றத்து எல்லையைத் தாண்டி அவன் உள்ளே வரமாட்டான். அதே மாதிரியே, அவன் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவன் என்பதால் அவன் வீட்டுக்குள்ளே நாங்கள் போக முடியாது. அவன் வீட்டுக் கிணற்றுத் தண்ணீரைக் கூட அருந்த முடியாது. அவனுடைய கள்ளைக் குடிக்கலாம் என்றால் அவன் வீட்டுத் தண்ணீரை

அருந்துவதற்குத் தடை விதிப்பது எங்களுக்கு அபத்தமாகத் தெரிந்தது. இப்படியான மரபுவழிப் பழக்கங்களின் ஆதிக்கம் குறைவான கொழும்பு நகரப் பகுதிகளில் சாதி வித்தியாசம் பார்ப்பது அறவே கிடையாது, திருமணச் சம்பந்தங்களைத் தவிர.

வேலுவின் காலை வேளை வருகைகளுக்கு முதலே நாங்கள் அவனைத் தேடித் தென்னந்தோப்புக்குப் போய் விடுவோம். அவனைக் கண்டு பிடிப்பது சுலபம். ஏனென்றால், 'டக் டக்,' என்று அவன் எண்பது அடி உயரத்துக்கு மேல் நின்றபடி தென்னம் பூக்களை வெட்டும் சத்தம் தென்னந்தோப்பு முழுவதும் வியாபிக்கும். வெட்டின பூக்களுக்கு மேல் உப்பையும் வேறு வாசனைத் திரவியங்களையும் பூசி விடுவான். வானமெங்கும் அளாவி, சூரிய வெளிச்சத்தில் மினுமினுக்கும் அந்தப் பச்சைத் தென்னோலைக் கடலில் மூழ்கியிருந்த வேலு, வெட்டிய தென்னம் பூக்களுக்குக் கீழே மண்பானைகளைக் கட்ட அவற்றுக்குள் கருப்பநீர் கசியும்.

சிலவேளைகளில் பருவமழைக் காலம் வர முதல் வீசும் வாடைக் காற்றின் ஆவேசத்தில் தென்னோலைகள் தாண்டவம் ஆடுவன. வாள் சண்டையில் மோதும் வாள்களைப் போலவோ அல்லது பாம்புகளைப் போலவோ தென்னோலைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்வன. அந்தப் பச்சைக் கடலில் அவன் மிதந்து கொண்டிருக்கும்போது தென்னை மரங்கள் காற்றின் உக்கிரத்தில் சாய்ந்தாடுவது பயங்கரமாக இருக்கும். இருண்டு வருகையில், ஓலமிட்டபடி அவை ஆடுவது வானத்தில் ஒரு விருத்தபாகம் வரைவது போல இருக்கும். அப்படியான நேரங்களில் தென்னை மரங்கள் ஆபத்தானவை போலத் தெரிவன. ஒரு நாள், "இந்த மரத்தில இருக்கிற தேன்கூட்டை எடுக்க வேணும்," என்று அவன் சொன்னபோது அப்படித்தான் தெரிந்தது.

அன்றிரவு வேலுவுடனும் அவனது மூத்த மகனுடனும் தென்னந்தோப்புக்குப் போனோம். வேலு மரத்தில் ஏறியபோது இருண்டு விட்டதால் அவன் என்ன செய்கிறான் என்று எங்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. திடீரென்று மர உச்சியில் நெருப்புப் பற்றிக் கொண்டது போலத் தெரிந்தது. ஒரு தென்னம் பொச்சுக்குத் தீயூட்டி அதை அங்குமிங்கும் ஆட்டியபடி வேலு தேனீக்களைப் புகைத்துக்கொண்டிருந்தான். தென்னோலைகளுக்கு நடுவில் தீப்பொறிகள் பறந்து சரமாரியாகக் கீழே பொழிந்தன. தென்னைமரம் கோபத்தில் நெருப்பும் புகையும் கக்குவது போல இருந்தது. கொஞ்ச நேரத்தில் வழக்கம்போலச் சிரித்தபடி தேனடைகளைக் காவிக் கொண்டு வேலு கீழே இறங்கி வந்தாலும், அந்த இருளில் வேலு ஏதோ தீயசக்திகளோடு சேட்டை விடுகிறான் என்கிற நினைப்பு என் மனத்தை ஆக்கிரமித்தது.

ஒரு நாள் வேலுவின் மனைவி தென்னந்தோப்புக்கு வந்தாள். கொஞ்சம் கூனலுடன் ஏதோ ஒரு பாம்பையோ உடும்பையோ தேடுவது போல அவளது கண்கள் அங்குமிங்கும் துள்ளிப்பாய, "குண்டு! குண்டு!" என்று கத்தினாள். குண்டு வழக்கம்போல ஏதோ ஒரு மர உச்சியில் ஒளித்திருந்தான்.

அவளது கன்னங்கரேலென்ற தலைமுடி பிடரியில் ஒரு சிறிய குடுமியாகக் கட்டப் பட்டிருந்தது. தன் சிறிய முகத்தைச் சுளித்தபடி சந்தேகத்துடன் சுற்றிப் பார்த்தாள். "தம்பிமார், குண்டு எங்கை எண்டு உங்களுக்குத் தெரியுமா?" என்று ஆற்றாமையோடு கேட்டாள்.

நாங்கள் பதில் சொல்ல முதலே, வேலு தன் மரத்திலிருந்து இறங்கி வந்து, குறும்புத்தனமான பள்ளிகூட மாணவன்போல, "அவனோட உனக்கென்ன வேண்டியிருக்கு?" என்று குதர்க்கமாகக் கேட்டான்.

"அவனைச் சந்திக் கடைக்கு அனுப்பிச் சவுக்காரம் வாங்க வேணும்," என்று அவள் திருப்பிக் கத்தினாள். அதைக் கேட்டதும் குண்டு தான் இருந்த இடத்திலிருந்து தேங்காய்களை மழை போலப் பொழிய வைத்தான்.

அவளுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. வேலுவின் பக்கம் திரும்பி, "நீயும் உன்ர மரங்களும்! நீ குண்டுவைப் பழுதாக்கிறாய். இன்னுங் கொஞ்ச நாளில அவன் ஈயோட்டக் கூட வக்கில்லாதவனா வந்திடுவான். கடவுளே, என்னைக் கொண்டு போயிடு!" என்று வசைந்தபடி தான் வந்த வழியால் திரும்பி நடந்தாள். குண்டு வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான். வேலுவும், "ஹூ! ஹூ! ஹூ!" என்று வயிறு குலுங்க வாய்விட்டுச் சிரித்தான். பையனைப் பார்த்துப் புன்னகைத்து விட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தான். குண்டு செய்வதற்கு என்று தோப்பில் ஒரு வேலையும் இல்லையென்றாலும் குண்டுவைத் தென்னந்தோப்பிலேயே தன்னுடன் வைத்திருக்கத் தான் வேலு சதித்திட்டம் தீட்டுகிறான் போல இருந்தது.

"ஏன் அவ தென்னமரங்களைக் கூடாதவை எண்டு சொல்லுறா?" என்று நான் என் அண்ணன் இரத்தினத்தைக் கேட்டேன்.

"ஆருக்குத் தெரியும்? அதுகள் கூடாத மரங்களா இருக்கலாம்," என்றான் இரத்தினம்.

வேலுவுடன் நாங்கள் இருந்தபோது இயற்கையின் கொடைகளைத் தவிர வேறு எதைப்பற்றியும் சிந்திப்பது கடினம். முப்பத்தாறு வருடங்களாக, கண்ணின் மணிகளைப் போல அவன் பாதுகாத்து வளர்த்த வளர்ப்பில் தான் இந்த மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. எங்களுக்கு ஒரு அதிசயம் ததும்பும் முழுத் தென்னை உலகத்தையும் அவன் திரைதிறந்து காண்பித்தான். சில மரங்களைச் சுட்டிக் காட்டி, "இதுகள் தான்

திறமான போர்த்தேங்காய் மரங்கள்,'' என்றான். இந்த மரங்களிலிருந்துதான் கடினமான உறுதிமிகுந்த ஓடுகள் கொண்ட தேங்காய்கள் கிடைப்பன. இவற்றை வைத்தே போர்த்தேங்காய் விளையாடுவார்கள். வேலுவும் போர்த்தேங்காய் விளையாடுபவர்களில் ஒருவன்.

போர்த்தேங்காய் விளையாட்டில் எதிரி அணியில் உள்ள ஒருவன் ஒரு தேங்காயை அசுர வேகத்தில் எறிவான். அதை நோக்கி வேலு தன் கையில் இருந்த போர்த்தேங்காயை எறிவான். வேலுவின் தேங்காய் பிளந்து உடைந்தாலோ அல்லது எதிரியின் தேங்காயைப் பிளக்கத் தவறினாலோ, அந்த ஆட்டத்தை வேலு இழந்துவிட்டதாகக் கருதப்படும். சில கிராமங்களில், உடைந்த போர்த்தேங்காய்களிலிருந்து எடுக்கப்பட்ட புனித இளநீரை ஒரு பானையில் ஏந்தி அக்கம்பக்கக் கிராமங்களுக்கூடாக "ஹோயா!" என்று கத்தியபடி ஊர்வலமாகக் கொண்டு செல்வார்கள் என்று வேலு சொன்னான். இளநீர் புனிதமானது. நோய் துன்பங்களை விரட்டியடிக்கும் வல்லமை கொண்டது. வேலு பேசுவதைக் கேட்கும்போது தென்னை மரங்களும் வேப்பமரங்கள், புளியமரங்கள் போலப் பேய்பிசாசு வாழும் தீய மரங்களாக இருக்குமோ என்று எனக்கு இருந்த சந்தேகங்கள் எல்லாம் கரைந்து போயின.

எப்போதாவது அவனது மரங்களில் ஒன்றைத் தறிக்க வேண்டி இருந்தால் வேலுவைச் சோகம் கவ்வும். ஒரு நாள் ஒரு பழைய மரத்தை எங்களுக்குக் காட்டி அது ஆபத்தான மரம் என்று சொன்னான். "நல்ல வேளை இது நான் நட்ட மரமில்லை, என்ர பாட்டா நட்ட மரம்,'' என்று சொல்லி ஆறுதல் பட்டுக் கொண்டான். வேலுவும் குண்டுவும் கயிற்றால் மரத்தை இழுத்துக் கட்டிய பிறகு, தன் கோடாலியால் மரத்தின் அடிப்பாகத்தை வேலு ஓங்கி வெட்ட, அந்தப் பழைய மரம் நிலம் அதிர விழுந்தது. "அநியாயம்,'' என்றான் வேலு. நானும் அப்படியே நினைத்தேன். அதற்குப் பிறகு மரத்தின் நடுவில் இருந்த வெண்ணெய் நிறத் தென்னங் குருத்தைக் கத்தியால் வெட்டி எடுத்தான். அதன் சுவை பாதாம்பருப்பும் இலைக்கோசுவும் கலந்த மாதிரியான ஒரு அலாதியான சுவை! சுவை பார்த்தபிறகு மிஞ்சியிருந்ததில் ஊறுகாய் போடப்பட்டது. இந்த மரத்தின் குருத்தை நாங்கள் அனுபவிக்க கிட்டத்தட்ட நூறு வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், அந்தக் காத்திருப்பு வீணாகவில்லை. அதற்குப் பிறகு விழுந்த மரத்தை ஒரு துலாவாக உபயோகிக்கக்கூடிய வகையில் வேலு செப்பனிட்டான்.

"மனுசரின்ர சத்தமோ அல்லது கடலின்ர சத்தமோ கேக்கிற இடங்களை விட்டு எதிர்ப்பக்கமாத் தென்னை மரங்கள் வளராது எண்டு உங்களுக்குத் தெரியுமா?'' என்று வேலு எங்களைக் கேட்டான். அது இலங்கைக் கிராமத்தவர்களின் ஒரு நம்பிக்கை. ஆகவே, நாங்கள் தென்னந்தோப்புக்கூடாக நடந்து போகும்போது உரக்கப் பேசிக் கொண்டு போனோம். தென்னை மரங்கள் செவிமடுத்துக் கேட்டன.

அந்த விடுமுறை அச்சுவேலியில் அருமையாகக் கழிந்தது. சூரியன் இதமாக எறித்தான். அது எங்களுக்குக் குதூகலம் ஊட்டியது. தொட்டவை எல்லாவற்றுக்கும் இளமையும் பளபளப்பும் வழங்கும் சூரிய வெளிச்சம் அது. விடுமுறை முடியப்போகும் தருணம், வாடைக்கால பருவமழை ஆரம்பிக்க முன்னர், ஒரு மாலைப் பொழுதில், முகில்கள் குழுமி சூரியனை மறைத்தன. தென்னந்தோப்பபிலும் மாந்தோப்பிலும் ஏதோ இனந்தெரியாத திகில் மூட்டும் இருள் சூழ்ந்தது. அப்போது தான் சூறாவளி அடிக்க ஆரம்பித்தது.

சூறாவளி அடிக்கும்போது நிலத்திலிருந்து எழும் சுழல் காற்று புழுதியையும் காய்ந்த மாவிலைகளையும் தூக்கிச் சுழற்றிக் கடாசி எறியும். காடு ஓலமிடும். காற்றின் உக்கிரத்தைத் தாங்க முடியாமல் தென்னை மரங்கள் இராமனின் வில் போல வளைந்தாடுவன. தென்னோலைகள் பீதி கொண்டு சலசலப்பன. புயல்காற்றின் சத்தத்துக்கூடாகத் தேங்காய்கள் பொத் பொத்தென்று விழும் சத்தம் கேட்கும். திடீரென்று வானம் திறந்து பயமூட்டும் வக்கிரத்தோடு பெருமழை பொழியும். வெள்ளம் திரண்டு குழாய்களுக்கூடாகவும் கால்வாய்களுக்கூடாகவும் பாயும் சத்தம் மனிதர்களின் குரல்களை அமுக்கி விடும். புளியமரத்திலும் மற்ற தீய மரங்களிலும் வதியும் பேய்பூதங்கள் அலைந்து திரிய ஆரம்பிப்பன. சூறைக்காற்றால் கடலிலிருந்து வானோக்கி எழும் நீர்த்தாரைகள் மீன்களையும் சேர்த்துத் தூக்க, எங்கள் முற்றங்களில் மீன்கள் வானத்திலிருந்து விழுவன.

இந்த ஊழித்தாண்டவம் கொஞ்சம் அடங்கியபோது குண்டு ஒரு அணைந்துபோன அரிக்கன் விளக்கை ஏந்தியபடி எங்கள் வீட்டுக்கு ஓடி வந்தான். "அப்பாக்குக் காயம் பட்டுட்டுது,'' என்று சொல்லிவிட்டு விக்கி விக்கி அழுதான். எங்களுடைய தொப்பிகளையும் குடைகளையும் எடுத்துக் கொண்டு, தாடித் தாத்தாவுடனும் பூட்டனாருடனும் மழைவெள்ளத்துக்கு ஊடாக ஓடிப் போனோம். முள்ளுப் பற்றைகளிலும் சுண்ணக்கற் பாறைகளிலும் தடக்கி விடாமல் இருப்பதற்காகக் கை விளக்குகளை எங்களுக்கு முன்னால் விரிந்த பாதையை நோக்கிப் பிடித்தபடி ஓடினோம்.

வேலுவின் குடிசையை அடைந்தபோது காத்திருந்த காட்சி எங்களை அதிர வைத்தது. கைவிளக்குகளினதும் தென்னோலைப் பந்தங்களினதும் வெளிச்சத்தில் வேலுவின் குடிசை முட்டைக் கோது போல நசுக்கப் பட்டிருந்ததைக் கண்டோம். நொருங்கிப் போயிருந்த குடிசைக்கு மேலே ஒரு கொடூரமான பயங்கர வடிவம்

அதன் நீண்ட உருவம் ஈரத்தில் மினுமினுத்தபடி கிடந்தது. அது வேலுவுக்குப் பிரியமான செவ்விளநீர் மரங்களில் ஒன்று. எல்லாவற்றிலும் உயரமான, பவளநிறத் தேங்காய்களைத் தந்த, வேலுவின் மனதுக்கு மிகவும் உகந்த மரம். புயலின் உச்சகட்டத்தில் அது சரிந்து விழுந்திருக்கிறது. இப்போ ஏதோ வெற்றிக் களைப்பில் அதன் ஓலைகள் பாம்பு சீறுவது போல மெதுவாகச் சலசலத்துக் கொண்டிருந்தன. வேலு அந்தப் பெரிய மரத்தின் கீழ் மாட்டுப் பட்டிருந்தான். அயலவர்கள் அவனை விடுவிக்க அவசரமாக முயன்று கொண்டிருந்தனர். யாரும் எதுவும் பேசவில்லை, ஆனால், எல்லோரையும் கவலை கவ்வியிருந்தது. அவர்கள் வேலுவை ஒருவாறாக ஒரு தூக்குப் படுக்கையில் ஏற்றிக்கொண்டபோது எனக்கு அருகில் போய்ப் பார்க்கும் துணிச்சல் இருக்கவில்லை. அவனது மனைவியும் மகளும் அவனது மூத்த மகனுக்கருகே நின்றபடி விக்கி விக்கி அழுது கொண்டிருந்தனர். இளைய மகன், சிறுவன் குண்டு, அவர்கள் வேலுவை ஒரு மோட்டார் வண்டியில் ஏற்றும்போது, மூச்சு விடாமல் தன் தகப்பனுக்கு ஏதோவெல்லாம் கதை சொல்லிக்கொண்டிருந்தான்.

பந்தங்களின் வெளிச்சத்தில் எங்களைக் கண்டு கொண்ட வேலு மெதுவாகச் சிரித்தான். “அந்த மரம்தான்,” என்று சோர்வுடன் சொன்னான், “ஆனா ஒண்டுக்கும் யோசியாதேங்கோ. நான் கெதியாத் திரும்பி வந்து தோட்ட வேலையெல்லாம் பாத்துக் கொள்ளுவன்.”

“ஓம் வேலு,” என்றார் பூட்டனார். அவரது முகத்தில் கவலை படர்ந்திருந்தது. வேலு சின்னப் பையனாக இருந்த காலத்திலிருந்தே அவனை அவருக்குத் தெரியும்.

எனது சகோதரர்களும் நானும் வேலுவைப் பார்க்கப் பத்து மைல் தொலைவில் இருக்கிற மானிப்பாய் வைத்தியசாலைக்குப் போனோம். அங்கே இலங்கை மருத்துவர்களும் அமெரிக்க மருத்துவர்களும் பணி புரிந்தார்கள். பூட்டனாரும் எங்களுடன் வந்தார். அந்த வைத்தியசாலை பளிச்சென்று துப்புரவாகவும் குளிர்மையுடனும் இருந்தது. வெள்ளைச் சேலைகள் அணிந்த தாதிகள் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். வேலுவுக்கு இன்னும் மயக்கம் தெளிந்து சுய நினைவு வரவில்லை. அடுத்த நாள் விடிய முதலே வேலு காலமாகி விட்டான் என்ற செய்தி கிடைத்தது. அவனது உடலை எடுத்துக் கொண்டு அச்சுவேலிக்குத் திரும்பினோம்.

அன்று பறை மேளம் கொட்டிச் சங்கு ஊத ஊர்ப் பெண்கள் வேலுவுக்காக ஒப்பாரி வைத்தார்கள். சிலர் வரிசையில் நிற்கச் சிலர் வட்டமாகக் கூடியிருந்தார்கள். ஒவ்வொருவரும் வேலுவின் சிறப்புகளைப் பற்றியோ அல்லது அவன் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றியோ பாட்டாக இரண்டு அடி சொன்னார்கள். ஒருவரை அடுத்து இன்னொருவர் மாறி மாறிப் பாடினார்கள். பிறகு எல்லோரும் சேர்ந்து பல்லவி பாடினார்கள். யாரோ ஒருவர் அந்தச் செவ்விளநீர் மரத்தைச் சபித்தார். ஒப்பாரி நாள் முழுவதும் தொடர்ந்தது. நானும் என் சகோதரர்களும் பாடையில் கிடத்தியிருந்த வேலுவின் உடலைக் கடைசி முறையாகப் பார்ப்பதற்காக, அவசரமாகக் கட்டப்பட்ட செத்தவீட்டுப் பந்தலுக்குள் நுழைந்தோம். வெள்ளைப் பாடையில் மல்லிகை, அலரிப் பூக்கள் சூழ, ஒரு சாந்தமான முகபாவத்துடன் படுத்திருந்தான். எட்டு திரிகளுள்ள உயரமான தேங்காய் எண்ணெய்க் குத்து விளக்குகள் அவனது தலைமாட்டிலும் கால்களுக்குப் பக்கத்திலும் சொலித்துக் கொண்டிருந்தன.

சவ ஊர்வலத்தோடு சுடுகாட்டுக்குப் போனோம். வேலுவின் மூத்த மகன் தோளில் வைத்திருந்த மண் குடத்திலிருந்து தண்ணீரை நிலத்தில் தெளித்தபடி பாடையை மூன்று முறை சுற்றி வந்தான். பிறகு அந்தக் குடத்தை பாடைக்கு மேல் எறிய அது போர்த்தேங்காய் போல உடைந்து தண்ணீர் பீறிட்டுப் பாய்ந்தது. அவன் பாடையின் நான்கு மூலைகளிலும் கொள்ளி வைக்க, சுற்றி வர இருந்தவர்கள் தேங்காய் எண்ணையைத் தூவினார்கள். பாடை பகபகவென்று பற்றிக் கொண்டு எரிந்தது.

எந்த மரம் நல்லது, எது தீயது என்று திட்டவட்டமாகச் சொல்வது கடினமென்றாலும் அந்த நாளிலே நான் தென்னை மரம் தீயது என்ற முடிவுக்கு வந்தேன்.

“நீ என்ன நினைக்கிறாய்?” என்று என் அண்ணன் இரத்தினத்திடம் கேட்டேன்.

“எனக்குத் தெரியாது. ஆனால், தென்னை மரங்களில நிறைய உபயோகம் இருக்கு,” என்றான் அவன்.

“ஓம்,” என்றேன் நான், “எங்களைக் கொல்லும் வரை.”

இன்று அச்சுவேலியில் தோப்புகளைப் பராமரிப்பது குண்டுதான். அவன் உயரமாக, இளமையோடு, ஜொலித்துக் கொண்டு இருப்பான். தனது தலைப் பாகையை ஒரு கோணத்தில் அணிந்திருப்பான். அவன் காற்றில் சாய்ந்தாடும் ஒரு மர உச்சியில் நின்று கொண்டு தேங்காய்களைக் கீழே போடுவதை அசப்பில் பார்த்தால் அது வேலு தான் என்று நாங்கள் கற்பனை செய்யலாம். அவனுக்கும் அதே சிரிப்பும் அதே நம்பிக்கை மிகுந்த நடத்தையும்.

எழுத்துக்கினியவன் <ez.iniyavan@gmail.com>

*('The Reporter' அமெரிக்கச் சஞ்சிகையில் 1956ஆம் ஆண்டில் வெளிவந்த, 'The Tree Climber' கதையின் தமிழாக்கம்)*